[1980 ஜூலை 8

(ஊ.) கவன ஈர்ப்பு அறிவிப்புகள்—காலவரம்பு.

திரு. இரா. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் வருவதற்குக் கால தாமதம் ஆவதுபற்றி தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்தேன். அப்போது கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்வதற்கு 42 நாட்கள் எடுத்துக்கொள்ளலாம் என்று தாங்கள் தெரிவித்தீர்கள். எனக்கு மீண்டும் தாங்கள் பதில் சொல்கிறபோது ''42 நாட்கள் எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலை முன்பு இருந்தது. முந்தாநாள் தான் அதை 15 நாட்களாக மாற்றினோம்'' என்று தெரிவித்து இருக்கிறீர்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அந்த விதியைப் பார்த்துவிட்டேன். அதற்கு 7 நாட்கள்தான் 'டைம்'. அதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, அவசியமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியைக் குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது Matter of public imporetence and urgency. அதை உடனே எடுத்துக் கொள்ள வேண்டும். காவேரியிலும், பவானியிலும் வெள்ளம் ஏற்பட்டு பல குடிசைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன, பலர் இறந்து போயிருக்கிறார்கள். அது இந்தச் சர்க்கார் கவனிக்க வேண்டிய அவசரம் வாய்ந்த பிரச்னை. எனவே.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் கொடுப்பதற்கு முன்பே நிறைய உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். உறுப்பினரவர்கள்தான் லேட்டாகக் கொடுத்திருக்கிறார்கள். அது முழுவதையும் எடுத்துக்கொள்கிறேன். இதைப் பற்றி உறுப்பினரவர்களிடத்திலேயும் சொல்லியிருக்கிறேன். வெள்ளம் வந்து இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. இப்பொழுது வடிந்து கொண்டிருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, காவேரியிலே வெள்ளம் வடிவது உங்களுக்கும் தெரியும், ஊருக்கும் தெரியும். அந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பவர்களின் பிரச்னை மிக முக்கியமானது. இதில் லேட்டாகக் கொடுத்தேனா, முன்னால் கொடுத்தேனா என்பது அல்ல பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஒத்துக்கொள்கிறேன். பல உறுப்பினர்கள் இதில் கவனம் செலுத்திக் கொடுத்திருக்கிறார்கள். 54-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் வருகிறது. அதில் உறுப்பினரவர்களின் பெயரும் வருகிறது. அப்பொழுது அவர்கள் கேட்கலாம்.

1980 ஜூலை 8]

திரு. அ. ரகுமான்கான் : இன்னும் வரவில்லையே? எப்பொழுது வரும்? அட்ஜர்ன்மென்ட் மோஷனாக வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அட்ஜர்ன்மென்ட் மோஷனாக வரவில்லை; 54-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானமாக வருகிறது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, தயவு செய்து தாங்கள் உட்காரும்படி கேட்டுக்கொள்கிறேன், ஏனென்றால் நீங்கள் நிற்கும்பொழுது நான் பேசக்கூடாது. நான் சொல்லி விடுகிறேன். நான் கொடுத்திருப்பது ஒத்தி வைப்புத் தீர்மானம். ஒத்தி வைப்புத் தீர்மானம் என்பது வேறு, கவன ஈர்ப்புத் தீர் மானம் என்பது வேறு என்பது உங்களுக்குத் தெரியும். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கிறோம் என்றால், அமைச்சரவர்கள் அறிக்கை வைத்து விடுவார்கள், அவ்வளவுதான். ஆனால் ஒத்திவைப்புத் தீர்மானம் என்றால் பிரச்னைகளின் எல்லாத் தன்மைகளையும் விவாதிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுப்பதை உங்களுடைய சௌகரியத்திற்காக கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றாமல், இது பொது முக்கியத்துவம் வாய்ந்த காண்ட்ரவர்சி இல்லாத சப்ஜெக்ட் என்பதால் மக்களின் நன்மையைக் கருதி இதை எடுக்க வேண்டும். குடிசைகளை இழந்திருக்கிறார்கள். பலர் இறந்திருக்கிறார்கள், ஆகவே, அட்லீஸ்ட் நாளைக்காவது எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர் மானமாக நாளைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் விரும்புகிறார்கள். அதில் பிரச்னை இல்லை.

(4) 1980-81 ஆம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்டம் விவாதம்—தொடர்ச்சி.

திரு. என். முத்துவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் எனக்குப் பேசுவதற்கு அனுமதி தந்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பேராசிரியர் அவர் களுக்கும், என் வானூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய விவாதத்தைத் தொடங்குகின்றேன்.

1980-81 ஆம் ஆண்டுக்கான இந்த நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்க்கும்பொழுது அது உண்மைக்குப் புறம்பான, விளம்பரப்படுத்தப்பட்ட பட்ஜெட்டாக விளங்குகிறது. இந்த 1980-81-க்கான பட்ஜெட்டை நன்றாகப் பார்க்கும்பொழுது